
புதிய சமதர்மம்
புதிய உலகம் படைப்போம்
පුදිය සමදර්මම් Puthiya samadharam
இதழ் 91 | பெப்ரவரி 2010 | விலை ரூபா 20/=



JAFFNA LIBRARY 02 MAR 2010

# இடதுசாரி விடுதலை முன்னணியின் தோற்றம் அடுத்த கட்ட போராட்டத்தின் தொடக்கமாகும்.

இடதுசாரி சக்திகளும் தமிழத் தேசிய விடுதலை போராட்ட வாதிகளும் இணைந்து இடதுசாரி விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி உள்ளனர். எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் இந்த அமைப்பு போட்டியிடவுள்ளது.




இடதுசாரி விடுதலை முன்னணியும் தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பும் நடத்திய ஊடகவியலாளர் மாநாடு

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் மௌனித்ததன் பின்னர் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தார்மீக கடமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்தது. ஆனால் அந்த அமைப்பு அந்தப் பணியை செய்யாமல் விட்டதுடன் தமிழ் மக்களை சரணாகதி அரசியலுக்கு இட்டுச்செல்லவும் முயன்று வருகின்றது தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய சக்திகளை ஓரங்கட்டத் தொடங்கியுள்ளது. அதே நேரம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு துரோகம் செய்தவர்களை மீண்டும் அமைப்புக்குள் கொண்டுவருவதற்கு பகீரதப் பிராயத்தனம் செய்து வருகிறது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் கலாநிதி. விக்கிரமபாகு கருணாரத்ன, கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் ஒன்றிணைந்து பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் இதன்போது நாட்டின் பல பகுதிகளில் உள்ள முக்கிய பிரமுகர்கள் தமிழ் மக்களின்விடுதலையும் தென்னிலங்கை இடதுசாரிகளின் இலட்சியங்களும் இணைந்து செல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி

6

## ஜனாதிபதி தேர்தல் மக்களின் ஜனநாயக மாண்பை வஞ்சித்துவிட்டது.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் மக்கள் ஜனநாயகத்தில் வைத்திருந்த நம்பிக்கையை அழித்து விட்டது. மேற்படி தேர்தல் முறையற்றது என்பதை தேர்தல் ஆணையாளரின் உரையும், பிரதான ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவின் அறிக்கையும் புலப்படுத்துகின்றது.



தனது பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்து இருந்ததுடன் தான் ஜனாதிபதி தேர்தலின் போது பட்ட அவஸ்த்தைகளையும் கலக்கத்துடன் தெரிவித்திருந்தார். பிரதான ஜனாதிபதி வேட்பாளர் சரத்பொன்சேகா தன்னை அரசாங்கம் தடுத்து வைத்திருந்தாகவும் இந்த தேர்தல் முடிவை தான் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் அறிவித்துள்ளார்.

அரச வளங்கள் யாவும் ஆளும் கட்சிக்காக பாவிக்கப்பட்டிருந்ததுடன், அரச ஊடகங்கள் ஒருபக்கச் சார்பாக செயற்பட்டிருந்தன. அரச ஆதரவு சக்திகள் வன்முறைகளில் ஈடுபட்டதுடன் எதிர்கட்சிகள் செயற்பட முடியாதாளவு வன்முறைகளில் இறங்கியும் இருந்தனர்.சர்வதேச மட்டத்தில் இந்த தேர்தல் நியாயமானது என எந்த அமைப்பும் அறிவிக்க வில்லை. தற்போது இந்த தேர்தல் மோசடிக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கியுள்ளார்கள். இது பலம் பெறும் இதனூடாக பல போராட்டங்கள் வெளிக் கிளம்பும்

## வரலாற்று துரோகத்தால் அழிந்த பாரம்பரிய இடதுசாரிகள்

2010 பாராளுமன்ற தேர்தலில் பாரம்பரிய இடதுசாரிகளான லங்கா சமசமாஜ கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் தமது பிரதிநிதித்துவத்தை முற்றாக இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

சோல்புரி அரசியல் அமைப்பின் கீழ் நடைபெற்ற முதலாவது பாராளுமன்ற தேர்தலில் ஆட்சி அமைக்கும் நிலையில் இருந்த இடதுசாரிகள் இன்று தேசிய பட்டியலிலும் இடம் பிடிக்கமுடியாத அளவுக்கு தேய்ந்த நிலைக்கு சென்றுள்ளனர்.

போரினவாதத்திற்குள் சஞ்சரித்த இவர்களின் பயணம் முடிவுக்கு வந்துள்ளது. தொழிலாளர்களுக்கும் தேசிய இனங்களுக்கும் செய்த துரோகத்தின் விளைவால் சமுகத்தில் இருந்து துடைத்தெறியப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குரல்

# செயற்பாட்டுத் திறனுடனும் துணிச்சலுடனும் செயற்பட்டவர் தோழர் ஆ.க அண்ணாமலை

தோழர் ஆ.க. அண்ணாமலையின் 21வது ஞாபகார்த்த நினைவுதின வைபவத்தில் விரிவுரையாளர் சீலன்கதிர்காமர் ஆற்றிய உரை. இவ் வைபவத்திற்கு வ. திருநாவுக்கரசு தலைமை தாங்கியிருந்தார். இந்த நிகழ்வு வெள்ளவத்தை தமிழச் சங்கமண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் மக்கள் இடதுசாரிகளுக்கு போதிய ஆதரவை வழங்க முன்வருவதில்லை. ஆரம்பகாலங்களில் இடதுசாரிகளுக்கு ஆதரவை வழங்கியிருந்தனர். குறிப்பாக பொன் கந்தையா பருத்தித்துறையில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமையை குறிப்பிட்ட முடியும் ஆனாலும் பின்னைய காலங்களில் இடதுசாரிகளுக்கான ஆதரவை தமிழ் மக்கள் வழங்க முன் வரவில்லை.தோழர் அண்ணாமலை துணிச்சலும், செயற்பாட்டு திறனும் கொண்ட ஒரு தலைவராவார். 1979ம் ஆண்டு காலப்பகுதியில் நானும் அவரும் இணைந்து செயற்படும் வாய்ப்பு கிடைத்தது. தமிழ மக்களை பொறுத்தவரையில் குறிப்பாக வடபகுதியை பொறுத்தவரையில் 1979ம் ஆண்டு காலப்பகுதி பயங்கரம் நிறைந்த காலப்பகுதியாகும் 1979ம் ஆண்டு அன்றைய ஐக்கியதேசிய கட்சியின் தலைவர் ஜே.ஆர் ஜெயவர்தனா பயங்கரவாத தடைச்சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி இருந்தார். இத்தடைச்சட்டம் பரீட்சித்துப்பார்க்கும் களமாக வடபகுதி காணப்பட்டது.

1979 காலப்பகுதியில் இரவோடு இரவாக ஆறு தமிழ் இளைஞர்கள் வீடுகளில் இருந்து தூக்கிச் செல்லப்பட்டடு கொலை செய்யப்பட்டு வீதிகளில் அவர்களின் உடல்கள் வீசப்பட்டு இருந்தன. இவ் இளைஞர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டும் இருந்தன. தலைகள் வேறாக வைக்கப்பட்டிருந்தன. இவர்களுள் இன்பம், செல்வம் என்னும் போராளிகளின் தலைவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.இக் காலப்பகுதியில் தென் இலங்கையில் இருந்து பல்வேறு அமைப்புகளைச்சேர்ந்த தலைவர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்தனர். வடபகுதியில் நிலவிய மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விடயங்களை ஆராயவே இவர்கள் வந்தனர். இவர்களுள் அருட்தந்தை போல்கஸ்பஸ். அருட்தந்தை ஜோவான் தேவானந்தா கலாநிதி குமார் டேவிட் பாலாதம்பு போன்றவர்கள் முக்கியமானவர் ஆவார்கள் இவர்கள் இனங்களுக்கு இடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பின் அனுசரணையுடன் வருகை தந்திருந்தனர். யாழ்ப்பாணம் மாநகரசபையின் பொது நூலகத்தில் இவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. பலர் இவர்களுக்கு முன் வந்து நிலைமைகளை விளக்கினர். இக் கூட்டத்தில் இனங்களுக்கு இடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பின் யாழ் கிளைக்கான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் நான், தோழர் ஆ.க.அண்ணாமலை, அருட்தந்தை ஜெயசீலன் அடிகளார் ஆகியோர் உள்ளடக்கப்பட்டோம்.1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதி யாழ்பாணத்தில் மிகப் பெரிய அளவில் மனித உரிமைகள் தினம் நடத்தப்பட்டது. இந்த வைபவத்திற்கு தென் இலங்கையில் இருந்து சிங்கள தோழர்கள் வருகைதந்திருந்தனர். அன்றே நான் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்னாவை முதன்முறையாக பார்த்தேன். இவ்வேளை ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்தில் பாலாதம்பு, விக்ரமபாகு கருணாரத்ன, எம். சிவ சிதம்பரம் ஆகியோர் உரையாற்றினார்கள். இதன் முக்கியத்துவத்தை 1980ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியான லங்கா காடியன் பத்திரிகை தனது கட்டுரை மூலம் வெளிப்படுத்தியிருந்தது.இதன் பின்பு யாழ்பாணத்தில் வெகுஜன அமைப்பு செயற்பாட்டில் புதிய உற்சாகம் காணப்பட்டது.

1982ல் வடபகுதியில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட்டன. நவசமசமாஜ கட்சி பருத்தித்துறை நகரசபைக்கு வேட்புமனு தாக்கல் செய்திருந்தது. விடுதலைப் புலிகள் தேர்தலில் பங்கெடுக்கக் கூடாது என எச்சரித்து இருந்தனர். இவர்களின் பிரதிநிதிகள் அண்ணாமலையை சந்தித்து போட்டியில் இருந்து வாபஸ் பெறுமாறு மிரட்டியிருந்தனர். தோழர் அண்ணாமலை இது கட்சியின் முடிவு கட்சி எடுக்கும் முடிவுக்கு நான் கட்டுப்பட்டவன் என வாதிட்டுள்ளார். பின்னர் இவர்கள் தோழர் அண்ணாமலையை சவுக்கால் தாக்கியுள்ளனர். அண்ணாமலை பலத்த காயங்களுக்கு உள்ளானார்.

அண்ணாமலை போன்ற தோழர்கள் இரண்டு ஆயுதப்பிரிவினர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வேலைசெய்யும் நிலையில் இருந்தார். ஒருபக்கம் அரச பாதுகாப்புபிரிவு, மறுபக்கம் ஆயுதம் தாங்கிய தமிழ் அமைப்புக்கள் ஆனால் அண்ணாமலை சோர்வடையாமல் உற்சாகமாக செயற்பட்டார். 1983 இனக்கலவரம் மிகப்பெரிய பின்னடைவை வெகுஜன செயற்பாட்டுக்கு உருவாக்கியிருந்தது. தோழர் அண்ணாமலை தலைமறைவாகி இந்தியா சென்றார். 1984ல் நான் நாட்டைவிட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டேன்.வடபகுதியில் எந்தவித அரசியல் பேதமும் இல்லாமல் பொதுவான இலக்கை நோக்கி எல்லா வெகுஜன அமைப்புக்களும் செயற்பட முன்வந்தன. இந்நிலை தென்பகுதியில் இருக்கவில்லை மேலும் அங்கு நடைபெற்ற மனித உரிமைகள் மீறல் தொடர்பான விடயங்களை தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் விவாதிப்பதோடு மட்டுப்படுத்தி இருந்தனர். ஆவணப்படுத்துவதிலோ, அறிக்கைகளை உருவாக்குவதிலோ அவர்கள் தயாராக இருக்கவில்லை. இவையாவற்றையும், வெகுஜன அமைப்புக்களே செய்தன.

1981ல் மாவட்ட சபை தேர்தலின் போது அரசாங்கம் நடத்திய அரச வன்முறை பற்றி இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பு மிகக் காத்திரமான அறிக்கையை வெளியிட்டிருந்தது. மேற்படி வன்முறையை கண்டித்து யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மிகப்பெரிய கண்டன கூட்டம்நடைபெற்றது. இதற்கு நவ சமசமாஜ கட்சியின் சார்பில் குணசேன மாநாம கலந்து கொண்டார். 1987ல் இந்திய பாதுகாப்பு படை வடபகுதிக்கு வந்தவுடன் வெகுஜன அமைப்புக்களின் செயற்பாடு முடிவுக்கு வந்தது. இனங்களுக்கு இடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பும் அரசசார்பற்ற நிறுவனமாக மாறியது.நான் இங்கே குறிப்பிட விரும்புவது மிகவும் ஆபத்து நிறைந்த காலப்பகுதியில் தோழர் அண்ணாமலை செயற்பாட்டு திறனுடனும், துணிவுடனும் செயற்பட்டார். அவரின் பணி மகத்தானது தற்போது மீண்டும் 30 வருடங்களுக்கு பின் இடதுசாரிகள் செயற்பாட்டுக்கு உரிய காலம் கனிந்துள்ளது இவ்வேளை தமிழ் மக்கள் தமது ஆதரவுக் கரத்தை இடதுசாரிகள் பக்கம் நீட்ட வேண்டும்.

தோழர் ஆ.க. அண்ணாமலையின் 21வது நினைவு தின வைபவப்படங்கள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகா விடயத்தில் ஏற்பட்ட ஐக்கியம் தமிழ் தேசிய இனப் பிரச்சினையிலும் ஏற்பட வேண்டும்.

திருநாவுக்கரசு

ஜனாதிபதி எதிரணி வேட்பாளர் சரத்பொன்சேகா கைது செய்யப்பட்ட விடயம் நாட்டு மக்களுக்கு அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் உருவாக்கி உள்ளது. இதன் பிரதிபலிப்பாக நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன அரசாங்கம் ஏவிய குண்டர்படையை மக்கள் விரட்டியடிக்கும் நிலை உருவாகியுள்ளது. பொலிசாரின் பக்கச்சார்பு செயற்பாடுகளை நீதி மன்றமே கண்டித்துள்ளது மாநாயக்க தேரர்கள் ஒன்றிணைந்து பொன்சேகாவுக்கு எதிராக அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்டித்துள்ளனர் இலங்கையில் அண்மைக்கால வறலாற்றில் இது ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது.



மேலும் தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் அமில தேரர் இலங்கைஜனாதிபதியின் செயற்பாடுகளை இடிமீனின் செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுள்ளார் எனவே இன்று ஆட்சியாளர்களுக்கு எதிரான பரவலான மக்கள் போராட்டம் வெளிக்கிளம்பி உள்ளது. பல்கலைகழக மாணவர்கள் அடுத்தவாரத்தில் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர். சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசாங்கத்தின் மீது பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது . இந்த போராட்ட அலையில் சகல இனங்களையும் பிரிவுகளையும் உள்ளடக்கி இருப்பதாலேயே போராட்டம் வலிமையடைந்து வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் நீண்ட காலமாக நீறுபூத்த நெருப்பாக காணப்படும் தமிழ் தேசிய இனப்பிரச்சினையிலும் சகலரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை மலரவைக்க முடியும் .

ஜெனரல் பொன்சேகா விடயத்தில் ஐக்கியப்பட்டது போல் தமிழ் தேசிய விடுதலை தொடர்பில் ஐக்கியப்பட்டால் அது இந்த நாட்டில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும். இன்று மகிந்தராஜபக்ஷ ஒற்றை ஆட்சி என்ற நிலைப்பாட்டுடனேயே உள்ளார். இந்த நிலைப்பாடு இந்த நாட்டை இரு துருவங்களாக ஆக்கியுள்து. கடந்த ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கு மக்கள் மாத்திரம் அல்ல இந்த நாட்டில் வாழும் ஏனைய தேசிய இனங்களான முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் ஒற்றை ஆட்சிக்கு தகுந்த பதிலை வழங்கியிருந்தனர். இன்று ஜனாதிபதியாக இருக்கும் மகிந்த இராஜபக்ஷவை நாட்டில் வாழும்தமிழ், முஸ்லீம் மக்கள் ஏற்காதநிலையே காணப்படுகிறது. தமிழில் பேசுவதாலோ, இந்த நாட்டில் சிறுபான்மையினரே இல்லை என்று கூறுவதாலோ நாட்டில் ஐக்கியத்தை மலரச் செய்ய முடியாது என்பதை வடக்கு கிழக்கு மலையக முஸ்லீம் மக்கள் நிரூபித்துள்ளனர்.

உண்மையில் இந்த நாடு பிரிய வேண்டும் என யாரும் விரும்பமாட்டார்கள். தொடர்ச்சியான அரச பயங்கரவாதமே தமிழ் மக்கள் பிரிவினைவாதம் கோருவதற்கு காரணியாக அமைந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைப் பிரிவு தலைவர் அருட்தந்தை யொகான் தேவானந்தா தான் செல்லும் இடங்கள் எல்லாம் பயங்கரவாதம் பற்றி பேசவருபவர் முதலில் அரச பயங்கரவாதம் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டில் அரச பயங்கரவாதமே பயங்கரவாதத்தை தோற்றுவித்தது. என பேசிவருகின்றார்.எனவே அரச பயங்கரவாதத்தின் செயற்பாடு அவ்வளவு தூரம் தமிழ் மக்களை பாதிப்படைய செய்திருக்கிறது. இந்த நாடு பிரிய வேண்டும் என இந்த நாட்டில் எவரும் எண்ணமாட்டார்கள். ஆனால் அரசாங்கமே இந்த நிலையை உருவாக்கி வருகிறது செல்வநாயகம் பிரிவினை ஏற்படக்கூடாது என்பதற்காகவே சமஸ்டி கோரிக்கையை முன்வைத்தார். மேலும் 1931ல் டொனமூர் அரசியலமைப்பின் கீழ் தேர்தல் நடைபெற்ற போது யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் அதை பகிஸ்கரித்தது இலங்கைக்கு பூரண இறைமை கிட்டவில்லை என்பதற்காகவே அவர்கள் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர். தென் இலங்கை தலைவர்கள் பூரண சுதந்திரத்திற்கு போகாமல் அரைகுறை சுதந்திரத்தை பெறுவதற்கு தயாராக இருந்தநிலையில் யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் பூரண சுதந்திரத்திற்காக போராடியது. இது வரலாறு. இதையாரும் மறுக்கமுடியாது. இந்த நாட்டின் ஏனைய தேசிய இனங்களை ஓரம்கட்டி தனிச்சிங்கள அங்கிகாரத்தை நோக்கி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நகர்கின்றது. தமிழ் மக்களுக்கு எத்தகைய தீர்வையும் வழங்கமுடியாது என திட்டவட்டமாக ஆட்சியாளர்கள் அறிவித்தும் உள்ளனர். இத்தகைய சூழ் நிலையில் பொன்சேககவின் விடயம் மீண்டும் ஒரு ஐக்கிய நிலையை உருவாக்கி உள்ளது. எனவே மாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட அனைத்து பிரதான அரசியல் சக்திகள் பொன்சேகா விடயத்தில் காட்டிய அக்கறையை தமிழ் தேசிய இனப்பிரச்சினை தீர்விலும் காட்ட முன்வரவேண்டும்.

தமிழ் மக்கள் என்ன கேட்கிறார்கள் தாம் வாழும் பகுதிகளை தமது நிர்வகிப்பின் கீழ் நிர்வகிக்க அனுமதி கேட்கிறார்கள் இதில் என்ன தவறு உள்ளது. கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் இந்தநாடு பெறுமதி மிக்க உயிர்களையும் சொத்துக்களையும் இழந்துள்ளது இது தொடரவேண்டுமா? இந்த நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மை மக்கள் இதை ஒருபோதும் விருப்பப்படமாட்டார்கள் நாட்டில் செயற்படும் குறுகிய என்ணிக்கையான பேரினவாத சக்திகள் சகல இன மக்களுக்கும் தடைசக்திகளாய் செயற்பட்டு வருகின்றன. இவர்களை ஓரம்கட்டி இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க மாநாயக்க தேரர்கள் உட்பட பிரதான அரசியல் சக்திகள் யாவரும் ஒன்றிணைய வேண்டும்.

திருமதி பொன்சேகா கடத்தப்படுதல், தடுத்துவைத்தல், போன்றவற்றில் ஏற்படுத்தப்படும் அதிர்ச்சிகள், கவலைகள், விரக்திகள் என்பவற்றை நன்கு உணந்திருப்பார். இதன் வலி தமிழ் மக்களை கடந்த 62 ஆண்டு காலமாக தாக்கிவந்துள்ளது மேலும் இழப்புக்களை தவிர்ப்போம் ஐக்கியபட்ட செயற்பாட்டின் மூலம் பேரினவாதத்தை தோற்கடித்து நிரந்தர சமாதானத்தை உருவாக்குவோம்.

# தொடர்ந்தும் பிரதான கட்சிகளை தெரிவுசெய்வதை தவிர்ப்போம்

நோர்வேயில் இருந்து அப்துல் லீசாக்கிர்

யுத்த வெற்றியின் பின் சிறுபான்மை இனத்தின் குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எந்தவிதமான தீர்வையும் முன்வைக்காது தேர்தலுக்கு மேல் தேர்தலைத் திணித்து மகிந்த அரசு மிகவும் மோசமான ஆட்சியை நடாத்தி வருகின்றது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உரிய முறையில் குடியேற்றப் படாமை, கட்டுக்கடங்காத அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் போன்ற எல்லா காரணங்களையும் இனவாதத்தால் மூடிமறைத்து ஆட்சி நடாத்தி வருகிறது. புலிகளை வென்று விட்டோம் என்பதைத்தவிர மக்களுக்கு மகிந்த அரசினால் வேறு எதனையும் கூறிவிட முடியாது என்பதை இவருக்கு வாக்களிக்கும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. புரையோடிப் போயிருககுகம் இனப்பிரச்சினையை மன சுத்தியோடு அணுகாமல் வெறுமனே ஒரே நாடு ஒரே மக்கள் என்ற கோசத்தால் மாத்திரம் சமசமூக ஒற்றுமையை நாம் அடைந்து விட முடியாது. வடக்கில் அன்றாடம் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் போது தெற்கு மக்களுக்கு திரு விழாக் காட்டுவதில் நாட்டின் அமைதியை நாம் ஒருபோதும் அடைந்து விட முடியாது. மாறாக இனவாதத் தீயை ஊதி நெருப்பாக்கி அதில் குளிர் காய்வதிலேயே அரசு குறியாக உள்ளது.

சிறுபான்மை இனத்தைப் பொறுத்தவரையில் இரு பெரும் பிரதான கட்சிகளில் எமது இன சார் தலைவர்களைக் கொண்டுள்ளோம். இருப்பினும் வளர்ந்து வந்து கொண்டிருக்கும் இனவாதத்தை கட்டுப் படுத்தக்க வகையில் இவர்களிடம் தைரியம், நேர்மை சாணக்கியம், எந்த அளவுக்கு இருக்கின்றது என்பதை மக்களாகிய நாம் கண்டுகொண்டிருக்கின்றோம். எமது சிறுபான்மை இனத்தலைவர்கள் மக்கள் தலைவர்களாக இருப்பார்களாயின்எமது மக்கள் சொந்த நாட்டில் இன்னும் அகதிகளாக துன்பப் படக்கூடிய தேவையில்லை.

இதோ இன்னுமொரு தேர்தலையும் நாம் சந்திக்க வேண்டியதாகி விட்டது. நடந்து முடிந்த ஜனாதிபதி தோதல் ஊழல் நிறைந்தது என ஐக்கிய தேசிய கூட்டு கூறுவதும் இல்லை மிகவும் பரிசுத்தமானது என அரசு கூறுவதுமாக இருக்க உண்மை நிலையை மக்கள் அறிய எந்த விதமான வாய்ப்பும் இல்லாத நிலையில் பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவு செய்ய நாம் ஆயத்தமாகி விட்டோம். இரண்டு பிரதான காரணிகளை மாத்திரம் வைத்து மக்கள் இத் தேர்தலுக்கு வாக்களித் துள்ளனர். முதலில் ஆளும் ஐக்கிய கூட்டமைப்பிற்கு வாக்களிப்போர் தமிழனை அல்லது புலிகளை வெற்றி கொண்டதற்காக வழங்கப்படும் வாக்குகளாகவே இருக்கின்றது. எதிரணிகளுக்கு வாக்களிப்போர் மகிந்த அரசுக்கு எதிராகவும் அல்லது அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றங்களுக்கு எதிராகவே வழங்கப்படும் வாக்குகளாகவே கருதப் படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் எதிர் தரப்பு அதிகாரத்தை அடைந்தாலும் நாட்டின் பிரதான பிரச்சினையை தீர்க்காமல் நாடு எந்தவிதமான அபிவிருத்தியையும் அடைந்து விடமுடியாது. என்பதை நாம் கவனத்தில் கொள்ளளுதல் வேண்டும்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு தினமும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந் நிலையில் எதைச் செய்தாயினும் அதிகாரத்தை தம் வசம் வைத்துக் கொண்டு மக்களை தங்களது தேவைக்காக பிழையான வழி நடத்தலை நாம் புரிந்து கொள்ளாத பட்சத்தில் அனைத்து பிழைகளுக்கும் கொடூரமான முறையில் ஆளாகி விடுகிறோம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது எதிர்வரும் பொதுத் தேர்தலில் சமசமூகத்தை உருவாக்கத்தக்க பிரதி நிதிகளை தெரிவு செய்ய நாம் முனவர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலதுசாரி ஆதரவு என்றால் இராஜதந்திர நகர்வு

# இடதுசாரி ஆதரவு என்றால் ஒற்றுமை சிதைப்பா?

தமிழ் மக்களின் விடுதலைக்காக கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன அவர்கள் செயற்பட்டு வருகிறார். அன்று தொடக்கம் இன்று வரை பல போராட்டங்களிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றார். தற்போது காணாமல் போனவர்கள் தொடர்பாகவும், சிறையில் இருக்கும் 12000 மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் இவர் கடுமையாக உழைத்துவருகிறார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன நேர்மையான அரசியல் வாதி என பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார். வெளிநாடுகளில் வாழும் தமிழ் புத்தி ஜீவிகள் விக்ரமபாகுவை ஆதரித்ததுடன் தமது ஆதரவை பத்திரிகையில் அறிவித்தும் இருந்தனர். அனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதி தேர்தலில் விக்ரமபாகுவை ஆதரிக்க முன்வரவில்லை .

கடந்த ஜனாதிபதி தோதலில் மகிந்த ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா பிரதான அணிகளின் சார்பில் போட்டியிட்டனர். இடதுசாரி முன்னணியை பொறுத்தவரையில் இவர்கள் இருவரும் தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தை நசுக்குவதிலும் தமிழ் மக்களை தொகையாக அழித்ததிலும் நான் முந்தி, நீ முந்தி என செயற்பட்டவர்கள். என்ற அடிப்படையில் வேறாக போட்டியிட முன்வந்தனர். ஆனால் நடந்தது என்ன தமிழ் தேசிய கூட்டமைப்பு தான் கூறிவந்ததற்கு மாறாக சரத் பொன்சேகாவிற்கு வெளிப்படையான ஆதரவை வழங்க முன்வந்தது. இதற்கு சம்பந்தன் சொன்ன விளக்கம் “ஒன்றும் தரமாட்டேன் என்று சொல்பவரைவிட ஏதாவது தருவேன்” என்று சொல்பவரை ஆதரிப்பது நல்லது. எனவே இந்த நிலைக்கு இவர்கள் கீழ் இறங்கியதன் மூலம் வட்டுக்கோட்டை தீர்மானம் 1977 தேர்தலில் பெறப்பட்ட ஆணை என்பவற்றை தமிழ் மக்கள் தேசிய கூட்டமைப்பு காற்றில் பறக்கவிட்டுள்ளது. என்றே கூறவேண்டும். இன்று அவர்களின் நிலை ஏதாவது பெறுவது என்பது மட்டுமே.

ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட பல அமைப்புக்ள் சேர்ந்த சுதந்திரத்திற்கான மேடை என்னும் அமைப்பை உருவாக்கி இருந்தன. இதில் இடதுசாரி முன்னணியும் முதல் நிகழ்வில் கலந்து கொண்டது. இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாட்டை நம்பி நாம் இங்கு வரவில்லை. கலாநிதி விக்ரமபாகு கருணாரத்தின அழைத்தமையினால் ·இங்கு பார்வையாளராக மட்டுமே கலந்து கொள்கிறேன் என தெரிவித்து இருந்தார்.


இதே நேரம் மனோகனேசன் ஜெனரல் சரத்பொன்சேகாவை ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசிய முன்னணி பிரேரித்த போது தான் அந்த முன்னணியை விட்டு வெளியேறப்போவதாக ஆக்கிரோசமான அறிக்கையை விட்டிருந்தார். அதுமட்டும் அல்லாது விக்ரமபாகுவை இதில் தலையிடுமாறு நச்சரித்துக் கொண்டும் இருந்தார். பின்னர் அடங்கினார். ஜனாதிபதி தேர்தல் திருவிழா களைகட்டியதும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடு தலைகீழாக மாறியது. மாவை சேனாதிராஜா, மனோகனேசண் ஒன்றாக டக்ளஸ் தேவானந்தாவுடன் ஒரேமேடையில் அமர்ந்து 2009 மனித உரிமை நிகழ்வை நடத்தினர். காணாமல் போனோர் தொடர்பாகவும் சிறையில் இருக்கும் தமிழ் இளஞர்கள் தொடர்பாகவும் எம்மால் நடத்தப்பட்ட போராட்டங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அக்கறை காட்டவில்லை.பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முடிவை ஏற்காது சுயேட்சையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். எம்முடன் பொது பிரச்சாரத்தில் ஈடுபடவும் முன்வந்தார். இவரின் செயற்பாடு தமிழ் தேசிய கூட்டமைப்பின் கடுமையான கண்டனத்துக்கு உள்ளானது. அவர் மகிந்தவுக்கு சாதகமாக செயற்படுகிறார் என்றும் தமிழ் மக்களின் ஐக்கியத்தை சிதைக்கிறார் என்றும் தமிழ் தேசியகூட்டமைகப்பு பிரச்சாரம் செய்தது.

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ள தலைமைகளில் தமிழ் மக்களின் விடுதலைக்காக துணிச்சலுடன் உள் நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் செயற்பட்டு வருபவர் சிவாஜிலிங்கம். மேலும் இந்தியாவின் செயற்பாடுகளை கண்டித்தும் வந்தார். இன்று இந்திய அரசுக்கு தமிழ் மக்களின் விடுதலை தொடர்பில் அச்சுறுத்தலாக இருக்கும் தலைவராக சிவாஜிலிங்கமே உள்ளார். எனவே அவரை அந்த நாடு சரியாக அடையாளம் கண்டு செயற்படுகிறது. சிவாஜிலிங்கம் எமது கட்சியுடன் கடந்த மூன்று வருடங்களாக நெருங்கி செயற்பட்டு வந்தார். ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு அவர் மீது வசைபாடி அவரை ஓரம் கட்ட முயற்சித்து வருகிறது. தமிழ் தலைமைகளுக்கு நேற்றுவரை எதிரியாக இருந்தவர்கள் நண்பர்களாக மாற, தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்தவர்கள் துரோகியாக மாறும் நிலை ஜனாதிபதி தேர்தல் காலத்தில் நடந்தேறியது மேலும் மேற்படி தேர்தலில் தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவை ஆதரிக்க வேண்டும் என சில புத்திஜீவிகள் தொடர்ச்சியாக அறிக்கைகளை விட்டுவந்தனர். தமிழ் மக்கள் தொடர்பான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதுஅவை எதிலும் பங்கெடுக்காத இவர்கள் இந்த தேர்தல் காலத்தில் மட்டும் வெளிப்பட்டு தமிழ் மக்களுக்கு புத்தி கூறுபவர்களாக மீட்பர்களாக தம்மை காட்டிக்கொண்டனர். தேர்தல் முடிந்த கையோடு இலக்கிய நிகழ்வுகளுக்குள் தம்மை மீண்டும் புதைத்துள்ளனர்.

தோழர் அண்ணாமலையின் 21வது நினைவாஞ்சலி நிகழ்வில் பேசிய விரிவுரையாளர் சீலன் கதிர்காமர் பின்வருமாறு கூறியிருந்தார்“தமிழ் மக்கள் இடதுசாரிகளை ஆதரிப்பதில் பின் நிற்கிறார்கள், இது எமது சமுதாய விடுதலையை பாரிய பின்னடைவுக்கு இட்டு செல்கிறது” இன்றும் இந்நிலை தொடர்வதை காணமுடிகிறது. தமிழ் மக்கள் வலதுசாரிகளை ஆதரித்தால் அது இராஜதந்திர நகர்வு, தமிழ் மக்கள் இடதுசாரிகளை ஆதரித்தால் அது தமிழ் தேச; ஐக்கயத்தின் சிதைவு என்ற ஓலமே இவர்களால் இந்த தேர்தலில் மேடையேற்றப் பட்டது.

தமிழ் தினசரிகள் கூட இடதுசாரி முன்னணியின் செய்திகளை பிரசுரிப்பதற்கு பின்னடிப்பே செய்தது. கடந்த 60 ஆண்டு காலமாக தமிழ் மக்கள் வலதுசாரிகளை நம்பி இன்று வரை [illegible] என்ன [illegible] நிகழ்வு கூட அமெரிக்க உட்பட மேற்குலகம் தமிழ் மக்களின் முதுகிலேயே குத்தியது இங்கே இன்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்தயா, இலங்கை தமிழர் விடயத்தில் சாதகமாக நடந்தது கொள்கிறது என அறிக்கை விடுக்கின்றது. அடிக்கடி விஜயங்கள் செய்து இந்திய ஆட்சியாளரை சந்தித்தும் வருகின்றனர். இறுதி போரில் ஆயிரக்கணக்கான மக்கள் மரணத்தை தழுவஅதை பார்த்து கொண்டு இருந்தது மட்டுமல்லாது இலங்கை அரசுக்கு வேண்டிய சகல ஒத்துழைப்பையும் இந்தியா செய்தே வந்தது. எனவே இச் செயல்பாடுகள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு துரோகமாக தெரியவில்லை. கடந்த 40 வருட காலமாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராடிவரும் ஒரு தலைவரும், தமிழ் மக்களின் விடுதலைக்காக இரவு பகலாக உழைத்து வரும் ஒருவரும் இன்று இணைந்து பிரதான வேட்பாளர்களுக்கு எதிராக போட்டியிட்டது பிழையென தமிழ் தேசிய கூட்டமைப்பு வாதிக்கிறது.

தேர்தல் முடிந்த கையோடு தமிழ் தேசிய கூட்டமைப்பு விட்ட அறிக்கையில் சிங்கள மக்கள் வேறு, நாம் வேறு என்ற பாணியில் அறிக்கை இருந்தது. இதையே மனோகனேசனும் பின்பற்றி இருந்தார். தென் இலங்கை சக்திகளோடு ஐக்கியப்பட்டு ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டபின் சிங்கள மக்கள் எக்கேடு கெட்டாலும் எமக்கு அக்கறை இல்லை என்ற பாணியில் அறிக்கையிடுவது என்ன தர்மமாகும். தமிழ் தேசிய கூட்டமைப்பு சரத் பொன்சேகாவுடன் இணக்கத்துக்கு போனதை மகிந்த ராஜபக்ஷ தனக்கு சாதகமாக்கினார் இதை எதிர்த்து உரிய பிரச்சாரத்தை எதிர் அணியினர் செய்யத்தவறியதும் இங்கே அவர்கள் விட்ட தவறு என வாதிக்கப்படுகிறது. மேலும் இவையாவற்றையும் பிராந்திய ஆதிக்க சக்த்தியே தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளியது என்றே பேசப்படுகிறது. எனவே பிரபல ஊடகவியலாளர் ஒருவர் கூறிய கருத்தையே நான் இங்கு கூறவிரும்புகிறேன்.“சிறுவர்கள் இருளைக் கண்டு பயப்படலாம் ஆனால் முதியவர்கள் ஒளியைக் கண்டு ஏன் பயப்படவேண்டும்” தமிழ் தேசிய கூட்டமைப்பு இனவாதிகளை கண்டு அஞ்சியிருக்க வேண்டும் ஆனால் அவர்கள் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்தனர். தமிழ் தேசிய கூட்டமைப்பேன் இடதுசாரி முன்னணியையும், சிவாஜிலிங்கத்தையும் பார்த்து சினந்தது. இதற்கு வரலாறு தகுந்த பாடத்தை கற்பிக்கும்.



வடக்கு கிழக்கு,
தெற்கு உறவை
வலுப்படுத்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்துக்கான நோபல் பரிசும், ஒபாமாவின் யுத்த நடவடிக்கைகளும்

நடராஜா ஜனகன்

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 2009ம் ஆண்டுக்கான நோபல் சமாதானப் பரிசுக்கு உரியவர் ஆகியுள்ளார். இவர் இந்த பரிசுக்கு தகுதி உடையவரா என்பதே இன்றுள்ள கேள்வியாகும். யுத்த முனைகளில் இவர் காட்டும் ஆர்வம் இந்த கேள்வியை எம்மை கேட்கவைத்துள்ளது. இன்று ஆப்கானிஸ்தானில் என்ன நடைபெறுகிகிறது அமெரிக்காவின் நேரடி உத்தரவுக்கு கட்டுப்பட்டு ஆட்சி செய்யும் பொம்மை ஆட்சியே அங்கு நடைபெறுகிறது. உண்மையில் ஒபாமாவின் பிரதிநிதியே அங்கு ஆழ்கின்றார். என்றே கூறவேண்டும். அமெரிக்க படையினர் அங்கே என்ன செய்கின்றார்கள். அப்கானிஸ்தானில் நடைபெறும் திருமண வைபவங்கள், விவசாயிகளின் விவசாய செயற்பாடுகள்தொழிலாளர்கள் வேலைசெய்யும் கட்டிடப் பகுதிகள் எங்கும் இவர்கள் மரணத்தை விளைவிக்கின்றனர். வானில் இருந்து உலங்கு வானூர்தியில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகளால் ஆப்கானிஸ்தான் மக்கள் அதிகம் பலியாகுகின்றனர். இன்று ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினர் பயன்படுத்தும் ஆயுதங்கள் அதிநவீன தரத்தை சேர்ந்தவையாகும். இந்த ஆயுதங்கள் ஆப்கானிஸ்தான் பிரஜைகளின்சுவாசப் பைகளின் உள்ளுக்குள் இருக்கும் காற்றை கூட உறிஞ்சி எடுக்கும் தன்மை கொண்டவை என தெரிவிக்கப் படுகிறது. மேலும் ஆப்கானிஸ்தானில் உள்ள 338000 குழந்தைகள் மரணத்தை தழுவும் நிலையில் உள்ளதாக தெரிய வருகிறது. இவர்கள் போசாக்கின்மையால் இந்நிலைக்கு ஆளாகி உள்ளனர்என தெரிய வருகிறது. அமெரிக்க சார்பு நிர்வனம் இங்குள்ள குழந்தைக்கு ஒரு வருடத்திற்கு 27 அமெரிக்க டொலர்களை மட்டும் மருத்துவத்திற்கு ஒதிக்கியுள்ளதாம் எனவே போதிய மருத்துவ வசதிகள் இன்றியே குழந்தைகள் இறப்பை எதிர்நோக்குவதாக தெரிகிறது. இவை போதாது என்று தற்போது ஒபாமா பாக்கிஸ்தானில் பாரிய யுத்த நடவடிக்கைகளை தொடங்கியுள்ளார். இதனால் பாக்கிஸ்தானின் கிராமங்களில் இருந்து லட்சகணக்கான மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர். மேலும் ஒபாமா ஈரானுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றார். இவரது இராஜாங்க அமைச்சரான கிலரி கிளின்டன் ஈரானுக்கு அடி கொடுப்பதன் மூலம் சிறந்த பாடத்தை புகட்ட முடியும் என கூறியுள்ளார். ஈரான் இரகசியமாக அணு ஆயுத உற்பத்தியை மேற்கொள்வதாக ஒபாமா குற்றம் சாட்டி வருகின்றார். இந்த கருத்தில் எத்தகைய அர்த்தமும் இல்லை என்றே கருதப்படுகிறது. ஈரானின் அணு உற்பத்தி தொடர்பாக சர்வதேச அணுசக்தி அதிகார சபை ஏற்கனவே தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது. ஆனால் அமெரிக்க உதவியுடன் இரகசியமாக மத்திய கிழக்கில் அணு ஆயுத வலிமையுடன் இஸ்ரேல் உள்ளது. இதுபற்றி ஒபாமா மூச்சுக் கூட விடுவதில்லை மேலும் ஒபாமா பாலஸ்தீன அதிகார பிரிவினருக்கு இலஞ்சத்தை வழங்கி ஐக்கிய நாடுகள் சபையால் இஸ்ரேல் பாலஸ்தீத்தின் காஸா பகுதியில் நிகழ்த்திய மனித அழிவுகளை மூடி மறைக்கவும் முயல்கின்றார். இந்த அழிவுக்கான ஆயுதங்களை இஸ்ரேலுக்கு ஒபாமாவின் செயலாளர் அவரது பதவி யேற்புக்கு முன்பாகா வழங்கியதாக தெரிகிறது. கடந்த அமெரிக்க வரவு செலவு திட்டத்தில் ஒபாமா பாதுகாப்பு துறைக்கு ஒதிக்கியிருக்கும் நிதியின் அளவு 2ம் உலகமகா யுத்தத்தின் பின்னர் பதவியில் இருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒருவ்



ஒதுக்காத தொகையை ஒதுக்கியுள்ளதாக தெரியவருகிறது. அண்மையில் அமெரிக்காவின் பிற்ஸ்பேர்க் என்னும் நகரில் நடைபெற்ற ஜி 20 நாடுகளின் மாநாட்டுககுக அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவித்தவர்களை ஒபாமாவின் பாதுகாப்பு பிரிவினர் மோசமாக தாக்கியுள்ளனர். இதற்காக இவர்கள் பாவித்த ஆயுதங்கள் இதுவரையில் எவரும் பார்த்திராத நவீன ஆயுதங்கள் என கூறப்படுகிறது. ஒபாமா பதவிக்கு வருவதற்கு முன் குவான்ரலாமா தடுப்பு முகாம் தான் பதவிக்கு வந்தவுடன் மூடப்படும் என வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் இன்றுரை அந்த முகாம் மூடப்படவில்லை. ஆனால் இன்றும் சித்திரவதைகளும், படுகொலைகளும் தொடர்ந்து கொண்டே உள்ளன.

நோபல் பரிசு வெற்றியாளரான ஒபாமாவின் யுத்த முஸ்தீபுகள் யாவும் தற்போது இரகசியமாகவே கையாளப்படுகிறது கடந்த ஜுலைமாதம் கொலம்பிய நாட்டுடன் 7 தளங்களைப் பெறுவதற்கு அமெரிக்கா ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த செயற்பாட்டின் மூலம் கொலம்பியா கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அமெரிக்கா உருவாக்கியுள்ளது. எனவே தற்போது சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் அமெரிக்க தலையீடு இல்லாமல் சுவைக்கும் நாடுகளான பொலிவியா, வெனிசுலா, ஈகுடோவார், பராகுவே போன்ற நாடுகளுக்கு எதிரான நகர்வே ஒபாமா முன்னெடுத்துள்ளார். என்றே கூறப்படுகிறது. மேலும் கொலம்பியா ஆட்சியாளர் மிக மோசமான மனித உரிமை மீறல்களை புரிபவர்களாக உள்ளனர் இவர்களுக்கு இராணுவ ரீதியாக இன்று அமெரிக்காவே உதவி செய்து வருகிறது. 2002ல் ஜோஜ் புஸ் வெனிசுலா அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எடுத்த முயற்சி தோல்வியடைந்த பின்னர் தற்போது ஒபாமா நிர்வாகம் கொலம்பிய பரா இராணுவ பிரிவினரை வெனிசுலா பகுதிக்குள் செல்ல வைத்து அங்குள்ள மக்கள் ஆட்சியை முடிவுக்குகொண்டுவர முயல்கிறது. மேலும் லத்தின் அமெரிக்க நாடுகளில் சமாதானத்துக்கான யுத்தம் என்ற போர்வைளயில் குண்டுராஸ் ஜனாதிபதி மனுவல் சீலியாவுக்கு எதிராக கடந்த ஜுன் மாதத்தில் சதிமுயற்சிகளை மேற் கொண்டிருந்தார். குகண்டுராஸ் ஜனாதிபதி சீலியா தொழிலாளர்களின் வேதனத்தை உயர்த்தியதுடன், விவசாயிகளுக்கு மானியங்களை வழங்கி வறுமை நிலையை குறைக்கவும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். மேலும் மருந்து பொருட்களில் அமெரிக்கா செலுத்திய ஏகபோகத்தை முடிவுக்கு கொண்டு வரவும் முயன்றார். இதை குற்றம் என கூறமுடியுமா குண்டுராஸ் ஆட்சியில் இருந்த சட்டபூர்வமற்ற ஆட்சியாளர்களுக்கு ஒபாமா நிர்வாகம் சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக 64 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க அனுமதித்து இதன் மூலம் வெளிப்படுத்தப்படும் உண்மை என்னவென்றால் சண்டியர்கள் கூட அமெரிக்க நலனுக்காக ஆட்சியில் இருக்கலாம் என்பதையேயாகும். ஒபாமா சிக்காகோவில் இருந்து காவட் வரை இதனோடு முழு உலகத்திற்கும் தலைமைதாங்கும் போக்கில் காய்களை நகர்த்தி வருகின்றார். நோபல் பரிசு குழு அளவுக்கு அதிகமான விதத்தில் இனவாதத்தை கருத்தில் எடுத்து ஒபாமா சிறுபான்மை சமூகத்தை உடையவராக இருந்தாலும் தாராளவாத கொள்கை கொண்டவராகவும் இருப்பதாலும் அவருக்கு இந்த பரிசை பரிந்து உரைத்துள்ளது. உண்மையில் ஆப்கானிஸ்தான் குழந்தைகளின் மரணத்திற்கு இவர் பொறுப்பு, என்பது இங்கே கவனத்தில் கொள்ளப்படவில்லை .

இன்றைய முதலாளித்துவ ஊடாக உலகில் அரசியல் விவாதங்கள் தரம் குறைந்து காணப்படுகிறது. பதவிக்கு வருவதற்காக எதைவேண்டும் என்றாலும் எழுதலாம், பேசலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. அது இனம். மதம், வர்க்கம் எதுவாக இருந்தாலும் பிரச்சினை இல்லை பதவிக்கு வருவதற்கு உரியகருவிகளாக இவை உபயோகிக்கப் படுகின்றன. இவ்வளவு மோசமான பின்னணியில் உள்ள ஒருவருக்கு எப்படி நோபல் பரிசை வழங்கமுடியும் முதலாளித்துவம் மக்கள் நலன்களை விட வர்க்க நலன்டகளில் அதிகம் அக்கறை உடையது என்பது தெளிவாகின்றது.

# இனவாதம் இல்லாமல்

## முதலாளித்துவம் உயிர்வாழ முடியாது

ஐரோப்பிய முதலாளித்துவத்தின் சமூக கட்டமைப்பில் கறுப்பினத்தவர் சமூகத்தின் அடித்தளத்திலும் வெள்ளையர்கள் சமூகத்தின் உச்சத்திலும் காணப்படுகின்றனர். இது தென்னாபிரிக்காவில் 1994 வரை காணப்பட்டது இதை சட்டப்பூர்வமாக அன்று அங்கீகரித்ததும் இருந்தார்கள்.இன்று உலகம் முழுவதும் அடிமைமுறைமையும், தீண்டாமையும் சட்டத்திற்கு எதிரானது என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனாலும் வெள்ளையர்களே இன்றும் பணக்காரர்களாக உள்ளனர். கறுப்பர்கள் ஏழைகளாகவே உள்ளனர். இனவாதம் முதலாளித்துவத்தின் முதுகெலும்பாகும். பொருளாதார ரீதியான புறக்கணிப்புக்களை நியாயப்படுத்த அது தேவைப்படுகிறது. இந்நிலை தற்செயலாக ஏற்படும் ஒன்றல்ல. உண்மையாக நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் இனவாதம் நிலவும் பகுதிகளில் அங்குள்ள ஒரு பிரிவினர் அதன் மூலம்பொருளாதார நலனைபெற்றுக் கொண்டு இருப்பார்கள். எப்போதுமே இனவாதம் முதலாளித்துவத்திற்கு, இனரீதியாக உயர்ந்தளவில் சுரண்டுவதற்கு வாய்ப்பை வழங்குகிறது.

இன்று அராபியர்கள் அல்லது ஆசியர்கள், கடுமையான கீழ் நிலை வேலைகளை செய்து வருகின்றனர். மேலும் இந்த வேலைகளை மகிழ்வுடன் ஏற்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் வேலையில்லா திண்டாட்டம் மேற்கு நாடுகளில் ஏற்படும் வேளைகளில் ஆசிய மக்கள் [illegible] பழி [illegible] நாடுகளில் தொழிலாளர்களின் வேதனங்கள் குறைக்கப்படுதல், சலுகைகள் நிறுத்தப்படுதல்அரசாங்கங்களினால் மேற்கொள்ள படும்போது அதன் பழி ஆசியநாட்டு தொழிலாளர்கள் மீதோ ஐரோப்பியர் அல்லாத தொழிலாளர்கள் மீதோ சுமத்தப்படுகிறது. இன்று அவுஸ்ரேலியாவில் ஆசிய மாணவர்கள் மீதான தாக்குதலும் இத்தகைய போக்கின் வெளிப்பாடே.

மூன்றாம் மண்டல நாடுகளின் அபிவிருத்தியின் இன்மைக்கும் பின்தங்கிய நில்லைக்கும் அந்நாடுகளின் மக்களே காரணம் என மேற்குநாடுகளின் இனவாத போதகர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.எனவே இத்தகைய கொள்கைகளை பின்னணியாகக் கொண்டு மேற்கு நாடுகள் கடுமையான வட்டி விகிதங்களுடன் 3ம் மண்டல நாடுகளுக்கு வழங்கும் கடன்களை நியாயப் படுத்தப்படுகிறன.இனவாமும், தேசிய வாதமும் இல்லாமல் மேற்கு நாடுகளின் மக்களை சுதந்திரமாக செயற்பட விட்டால் அதன் மூலம் மேற்கு நாடுகளுக்கும், மூன்றாம் மண்டல நாடுகளுக்கும் இடையேயான சமத்துவமின்மை மற்றும் மூன்றாம் மண்டல நாடுகள் மீது மேற்கு நாடுகள் மேற்கொள்ளும்

7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருண்ட நோக்குடன் எதிர்கால நிதி நெருக்கடியை எதிர்கொள்ள முடியுமா?




சர்வதேச நாணய நிதியம் வெளியிடும் காலாண்டு சஞ்சிகையான நிதியும், அபிவிருத்தியும் என்ற சஞ்சிகையை 30 ஆண்டுகளாக வாசித்து வருகிறேன். மேற்படி சஞ்சிகையில் வெளியான கட்டுரைகளில் இறுதியாக வெளிவந்த சஞ்சிகையின் கட்டுரைகள் என்னை மிகவும் கவர்ந்து இருந்தன இந்த கட்டுரைகள் கடந்து டிசம்பர்மாதம் 2009ல் வெளியாகி இருந்தன. தற்போது உலகெங்கும் ஏற்பட்ட நிதி நெருக்கடியானது வரலாற்றில் என்றும் ஏற்பட்டிராத ஒன்றாக உள்ளதுடன், இந்த நிலமையானது அமெரிக்க ஆழும் வர்க்கத்தை சிந்திக்க வைத்துள்ளது மட்டுமல்லாது சர்வதேச நாணய நிதியத்தையும் சிந்திக்க வைத்துள்ளது. இந்த நெருக்கடியானது அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தவில்லை இன்றும் கூட சிலர் வாதிக்க முன்வரலாம்.ஆனாலும் இந்த காலாண்டு சஞ்சிகையில் முன்னைநாள் உலகவங்கி தலைவர் ஸ்ரிக்லிஸின் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளதுடன், ஒக்ஸ்பாம் தலைவரின் கருத்துக்கள், மற்றும் பச்சை மீள் கட்டுமானம் என்ற கட்டுரையும் வெளிவந்துள்ளது.

இன்று உலக முதலாளித்துவம் புரட்சிவாதிகளினதும் சீர்திருத்த வாதிகளினதும் கருத்துக்களை உற்று நோக்குகின்றது. இதற்கு முக்கிய காரணம் அது உயிர் வாழவேண்டும் என்பதைதவிர வேறு ஒன்றும் இல்லை.மனிதனிடம் இருக்கும் மிருக பலத்தை கொண்டு செயற்பாடுகள் ஊடாக உற்பத்தி, பரிவர்த்தனை என்பவற்றை சிறந்த முறையில் கையாள முடியும் என்று முதலாளித்துவம் நம்புகிறது. ஆனாலும் மேலாதிகமாக உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளை எப்படி கையாளுவது என்பதிலேயே பிரச்சினை உருவாகியுள்ளது. அண்மைகாலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் இதற்கு நல்ல உதாரணமாகும். மேற்படி சஞ்சிகையில் தனது கட்டுரையில் ஜோசெப் ஸ்ரிக்கிலிஸ் எதிர்கால சந்தைகள் அதனுடன், மற்றும் முதலாளித்துவம் தொடர்பான நம்பிக்கையான கருத்துக்களை முன்வைத்துள்ளதாக கூறுகிறார்.

ஜோசப் ஸ்ரிக்லிஸ் 19ம் நூற்றாண்டில் உரிமையாளர்கள் முதலாளித்துவத்தை நிர்வகித்தனர் என்றும் 21ம் நூற்றாண்டில் முதலாளித்துவத்தை மக்கள் நிர்வகிப்பார்கள் என்றும் கூறியிருந்தார். எனவே இங்கு உரிமையாளர்கள் இல்லாத நிலை ஏற்படுகின்றபோது அது அரச முதலாளித்துவம் என்ற நிலைக்கே செல்லுகிறது. எனவே பரந்தளவு மக்கள் பொருளாதாரத்தில் தொடர்பு படுகின்றபோது அங்கே அரச பொறிமுறை யூடாகவே கட்டுப்பாடுகளை உருவாக்க முடியும். எனவே இங்கு கார்ல்மாக்ஸ் கூறியது நிரூபணமாகிறது. கார்ல்மாக்ஸ் கூறினார் முதலாளித்துவம் இறுதியில் அரச முதலாளித்துவம் என்ற நிலைக்கு வந்தடையும் இதன் பின்னர் சோசலிஸம் உருவாகும் மார்க்ஸ் கூறியது இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஜோஸப் ஸ்ரிக்லிஸ் போன்றவர்களுக்கு இது பற்றிய அக்கறை இல்லை. அவர்களின் முழு சிந்தனையும் எப்படி முதலாளித்துவத்தை காப்பது என்பதிலேயே தங்கியிருக்கிறது.

இதற்கு தேவையானவற்றை அரச தலையீட்டின் உதவியுடன் செய்யமுடியும் என நம்பினர் கட்டுரையின் பிரகாரம் கெயின்சுக்கு முதலாளித்துவம் இல்லாது போவதில் உடன்பாடு இல்லை. மேலும் அரசாங்க தலையீடு தொடர்ச்சியாக பொருளாதாரத்தில் இருப்பதையும் அவர் விரும்பவில்லை. கெயின்ஸ்க்கும், ஸ்ரிக்லிஸ்சுக்கும் சோசலிசம் ஏற்பட்டால் தனிப்பட்டவர் செயற்பாடு யாவும் முடிவுக்கு வந்துவிடும் என்றே நம்பினர். மேலும் கெயின்ஸ் இந்த முறை எல்லாவற்றிலும் அரச தலையீட்டுக்கு வழிவகுக்கும் என நம்பினர். இவர்கள் தனிநபர் இறைமைக்கு சோசலிசத்தில் இடம் இல்லை என்றே நம்பினர். இவர்கள் ஸ்டலிசத்தின் செயற்பாடுகளை சோசலிசமாக கருதியுள்ளனர். இவர்கள் வாதங்கள் முதலாளித்துவத்துக்கு சாதகமாகவும், சோசலிஸத்தை திரிவு படுத்துவதாகவும் அமைகிறது.

**முதலாளித்துவத்தின் தகர்ப்பு.**

கார்ல்மார்க்ஸ் அடம்சிமித், டேவிட் றிக்காடோ, மல்தூசியஸ் போன்றவர்களின் கொள்கைகளை வைத்தே முதலாளித்துவத்தின் தகர்வை வெளிப்படுத்தினர்.சந்தையானது உற்பத்தி சக்திகளின் அபிவிருத்திக்கு கால் விலங்காக மாறும் என கண்டுகொண்டார். கெயின்சும் அவரை பின்பற்றுவோரும் மார்க்சின் கருத்தை முதலாளித்துவத்தை வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றுவதற்கு உரிய கருவியாக உபயோகிக்க முயன்றனர். எனவே அரச தலையீடு என்பது முதலாளித்துவ அரசில் அவசியமான ஒன்றாகும் பிரகாஸ் மேலும் கூறுகின்றார். காலனித்துவ நாடுகளில் உற்பத்தி மேற்கொள்ளப்படும் போது அவற்றுக்குரிய சந்தைவாய்ப்புக்கள் தேவைப்படுகின்றன. இந்த போக்கை வைத்து ஸ்ரிகல்ஸ் மார்கஸ்சுவுக்கு சவால் விடுக்கின்றார். எனவே காலனித்துவ நாடுகள் முதலீட்டு வாய்புக்களுக்கு அவசியமான பகுதியாகும் என ஸ்ரிக்லிஸ் வாதிக்கின்றார்.

காலனித்துவ நாடுகளின் மூல வளங்களை மட்டும் முதலாளித்துவம் சுரண்டவில்லை, அங்கே முதலீடு செய்கின்றன என்பது ஸ்ரிக்லிஸ்சின் கருத்தாகும். அபிவிருத்தி தொடர்பான கருத்தை 1916ல் லெனின் தான் எழுதிய ஏகாதிபத்தியம் என்ற நூலில் முன்வைத்தார் உதாரணமாக பழைய முதலாளித்துவ முறையில் சுதந்திரமான போட்டி முறையானது பிரிக்கமுடியாத ஒன்றாக இருந்தது. இது ஏற்றுமதி பொருட்களாக இருந்தது. உதாரணமாக இன்றைய பொருளாதார நிலையில் மூலதனத்தை ஏற்றுமதி செய்வதாக காணப்படுகிறது. நான் கால்மார்க்ஸ்சும் ஸ்ரிக்லிசும் அவர்கள் யூதர்கள் என்பதைதவிர வேறு எந்த விதத்திலும் உடன்பாட்டை காணவில்லை.அபிவிருத்தி என்னும் மார்சீய கொள்கையை நீண்ட நாட்களுக்கு முன்னர் லெனினே முன்வைத்தார். இன்று ஸ்டிக்லிஸ் சரிந்து செல்லும் உலக முதலாளித்துவத்தின் பேச்சாளராக மாறியுள்ளார். இவர் உண்மையான சீர்திருத்தம் நிதி நெருக்கடிக்கு முன்வைக்கப்படவில்லை என வாதிக்கிறார். எனவே அடுத்த 10-15 வருடங்களில் நிதி நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறுகிறார். எனவே உலக முதலாளித்துவ நெருக்கடி தீரவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

1

இருந்தனர்.

எமது நாட்டில் ஏகாதிபத்திய சக்திகளின் நயவஞ்சகநடவடிக்கைகளையும், பிராந்திய வல்லாதிக்க சக்திகளின் துரோக நடவடிக்கைகளையும் எதிர்த்துப் போராட முன்றாவது சக்தியின் தேவைப்பாடு இன்று பல்வேறு மட்டங்களிலும் உணரப்படுகின்றது. இத்தகைய சாதகமான காலப் பகுதியில் இடதுசாரி விடுதலை முன்னணி தோற்றம் பெற்றுள்ளது. மேற்படி புதிய அமைப்பின் தலைமையில் காலாநிதி.விக்கிரமபாகு கருணாரத்ன உள்ளார். காலாநிதி. விக்கிரமபாகு கருணாரட்ண கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டின் தொழிலாளர்களுக்காகவும் தேசிய இனங்களின் உரிமைகளுக்காகவும் போராடத்தில் ஈடுப்பட்ட தலைவராவார். இவர் நவசமாஜ கட்சியை ஆரம்பித்த நாட்களிருந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய ஊரிமைக்காக குரல் கொடுத்தது மட்டுமல்ல அதற்காக போராடி வரும் தலைவராவார்.

தழிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பல்வேறு வடிவங்களை எடுத்து வந்துள்ளது. ஏகாதிப்பத்திய சக்திகளினதும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளினதும் சூழ்ச்சிக்கு இந்தப் போராட்டம் பாரியளவில் முகம் கொடுத்து வருகிறது. இத்தகைய சூழ் நிலையில் பலமான இடதுசாரி தலைமையின் ஆதரவுடன் இப்போராட்டம் பயணிக்க வேண்டியுள்ளது. இது காலத்தின் கட்டாயமாகும்.

இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் தமிழ் மக்களை தோல்வி மனப்பான்மைக்குள் உள்ளாக்கி வருவது, மட்டுமல்லாது பிரந்திய வல்லாதிக்க சக்திகளின் நலனுக்கு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பலியாக்கியும் வருகின்றனர். இது மிகவும் மோசமான நிலையாகும். வன்னி போர்முனையில் பலியான மக்களை காப்பாற்ற உதவுவதற்கு முன்வாராத பிராந்திய சக்தி. மக்களை கொல்வதற்கு காரணமானவர்களுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கியது. இதை எப்படி மன்னிப்பது. எனவே அடுத்த கட்ட பயணத்துக்கு புதிய தோழமையுடன் தேசிய ஆதரவுடன், சர்வதேச ஆதரவுடனும் பொது பயணத்தை தொடங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்ட தொழிலாளர்களுக்கு அடிப்படை வேதனம் நாள் ஒன்றுக்கு ரூபா 500ம், காணியும் வழங்கப்பட வேண்டும்.

சுந்தரம் மகேந்திரன்



தோட்ட தொழிலாளர்களின் நிலைமை மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. விலைவாசி உயர்வால் ஏற்பட்டிருக்கும் சுமையை தாங்கமுடியாமல் எமது மக்கள் அதிகம் கஸ்ட்டப் படுகின்றனர். எனவே இன்று உள்ள சூழ்நிலையில் தோட்ட தொழிலாளர்களுக்கு நாளந்த கூலியாக ரூபா 500 வழங்கப்பட வேண்டும் இதற்கு மேலாக வாழ்க்கை செலவு சுட்டெண்ணுக்கு ஏற்ப உயர்வு படியும் வழங்கப்பட வேண்டும். இன்று இலங்கையில் வாழ்க்கை செலவு படி எல்லா தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுகிறது ஆனால் தோட்ட தொழிலாளர்களுக்கு இந்தப் படி வழங்கப்படுவதில்லை. தோட்ட தொழிலாளர்களுக்கு இந்த நாட்டின் தேசிய அந்தஸ்த்து இன்றுவரை கிடைக்காத நிலையே காணப்படுகிறது அரசாங்க வேலைவாய்ப்பு, உயாகல்வி, வேதன முறை, என பல்வேறு வகையான வாய்ப்புக்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைப்பதில்லை

இந்த நாட்டில் சிறுபான்மை, பெரும்பான்மை இல்லை என ஜனாதிபதி யுத்தம் முடிவடைந்த பின்னர் கூறியிருந்தார். ஆனால் தோட்ட மக்கள் கடந்த 200 வருடங்களாக அதே நிலையில் தான் உள்ளனர். இதற்கு முக்கிய காரணம் அவர்கள் சிறுபான்மையினராக இருப்பதே ஆகும். இன்று தோட்ட தொழிலாளர்களுக்கு ஒரு அடி நிலம் கூட சொந்தம் இல்லை. தோட்ட தொழிலாளர்கள் வாழும் பகுதியில் பெருமளவான தரிசு நிலங்கள் உள்ளன. இவற்றை ஏன் தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடாது. இங்ஙனம் காணிகள் வழங்கப்பட்டால் தோட்ட மக்கள் முன்னேற வாய்ப்பு உண்டு.

தற்போது தோட்டமக்களின் நிலமைக்கேற்ப கம்பனிகள் செயற்படவில்லை இதனால் தோட்ட இளைஞர்கள், யுவதிகள் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. வெளியிடங்களிலும், எமது இளைஞர்கள் போதிய கல்வி அறிவு, தொழில்நுட்ப அனுபவம் இன்மையால் நல்ல வேலைகள் கிடைப்பதில்லை இதனால் தேனீர்கடைகளில், வீட்டு வேலைகள் என கீழ் நிலையான தொழில்களே அவர்களுக்கு கிடைக்கிறது. இதனால் ஊழியர் சேமலாபநிதி போன்ற எவையும் இவர்களுக்கு கிடைப்பதில்லை.

மேலும் யுத்த காலத்தில் சந்தேகத்தின் பேரில் ஏராளமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு இன்று வரை சிறைகளில் உள்ளனர். எமது சமூகத்தை மேல் நோக்கி கொண்டுவர பலர் அமைச்சர்களானார்கள் ஆனால் அவை எவையும் தோட்ட மக்களின் வாழ்வில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.எனவே தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்தம் கூலியாக ரூபா 500 அடிப்படை வேதனமாக வழங்கப்படுவதுடன்இந்த நாட்டின் ஏனைய தொழிலாளர்கள் பெறும் மேலதிகமான கொடுப்பனவுகள் யாவும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும். குறிப்பாக வாழ்க்கை செலவு உயர்வுப் படி தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும். தோட்ட மக்கள் காணி உரிமை அற்றவர்கள் என்ற நிலைமாற்றப்பட்டு தோட்ட மக்கள் வாழும் இடங்களில் உள்ள காணிக்களை தோட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப் படவேண்டும். இந்த அடிப்படை இரண்டு விடயங்களுக்காக பரந்த போராட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கான ஆதரவை தென்னிலங்கை தொழிலாளர்களிடம் இருந்தும், முற்போக்கு சக்திகளிடம் இருந்தும் பெறப்பட வேண்டும்.

அரசை ஆதரிப்பதன் மூலம் மலையக மக்களுக்க வாழ்வாதாரங்களை கூட்டலாம் என்ற மாயை2010 ஜனாதிபதி தேர்தலுடன் முடிவுக்கு வந்துள்ளது. அரசாங்கத்தை சுற்றி யிருக்கும் மலையக அமைச்சர்களின் வார்த்தைகளை மலையக மக்கள் தொடர்ந்தும் கேட்க மாட்டார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. மலையக தொழிற்சங்க வாதிகளும் மலையக மக்களை ஒரு வட்டத்திற்குள்ளேயே வைத்திருக்கின்றனர். இம் மக்களை ஏனைய மக்களின் நிலைக்கு கொண்டு செல்வதற்கு உரிய எந்தத்திட்டமும் இவர்களிடம் இல்லை. கடந்த 60 வருடகாலமாக இந்த நாட்டை ஆட்சி செய்த பெருந்தேசியவாத கட்சிகளுடன் அணி சேர்வதால் மலையக மக்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்க மாட்டாது. எனவே புதிய அணியை நோக்கி மலையக மக்கள் பயணிக்க வேண்டும்.

இந்த நாட்டில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் இவர்கள் அனைவரும் பெருந்தேசியவாத கட்சிகளின் ஆட்சியில் தொடர்ச்சியான புறக்கணிப்புக்களுக்கு ஆளாகியே வருகின்றனர். இதில் இருந்து மீள்வதற்கு என்ன வழி உண்டு என்பதை எண்ணி பார்க்க வேண்டும். உலகில் பல பகுதிகளிலும் புதிய அணிகளின் வருகையால் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.குறிப்பாக லத்தீன் அமெரிக்கா நாடுகளில் பலவேறு பட்ட தேசிய இனங்களுக்கு புதிய அரசியல் மாற்றங்களாளேயே விடிவு எற்பட்டது. எனவே எமது நாட்டிலும் புதிய விடிவுக்கான புதிய அணிகளை ஆதரிக்கும் நிலையை நோக்கி பயணிப்போம்.

5

ஆக்கிரமிப்புக்கள், யுத்தங்கள் போன்றவற்றுக்கு மக்கள் ஆதரவை அந்நாட்டு மக்கள் வழங்க மாட்டார்கள். இதனாலேயே இனவாதமும், தேசியவாதமும் இங்கே ஊட்டப்படுகிறது. இதை வேறு வார்த்தையில் கூறுவோமாயின் இனவாதம் முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதான கருவியாகும் தனது நாட்டுக்குள் இருக்கும் மக்களை அல்லது நாடுகளுக்கு இடையே மக்களை வேறுபடுத்த இனவாதத்தை அவர்கள் துணையாக கொள்கின்றார்கள் இது பிரித்தாளும் தந்திரத்தின் பிரதானமான வடிவமாகும்.

வறலாற்றை நாம் பார்க்கின்ற போது அவுஸ்ரேலியாவை தனது காலனித்துவ ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்த பிரித்தானியா அங்கிருந்த பூர்வீக குடிகளை துரத்திவிட்டு அவர்களின் நிலத்தை தமதாக்கினர். பின்னர் அவுஸ்ரேலியா வெறுமையான பூமி என பிரித்தானியா பிரகடனப்படுத்தியது.இங்கே பாரம்பரியமாக வாழ்ந்த மக்களை புறந்தள்ளிவிட்டு தனக்கு தேவையான மூலவளங்களையும் நிலத்தையும் பிரித்தானிய முதலாளித்து கபளிகாரம் செய்தது மேலும் அவுஸ்ரேலியாவில் வாழ்ந்த பூர்வீக குடிகளின் உரிமைகள், பண்பாடுகள் பிரித்தானிய முதலாளித்துவத்துவ சவாலாக இருந்ததால் அவை இல்லாது ஒழிக்கப்பட்டது. இதனுடன் வளம் நிறைந்த மத்திய அவுஸ்ரேலிய பகுதி பிரித்தானிய அரசாங்கத்தில் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

மேலும் தொடர்ச்சியாக இம் மக்கள் மீது வன்முறை பிரோயோகிக்கப்பட்டு அவர்களின் நிலத்தை அரசாங்கமும்,கம்பனிகளும் பறித்துவந்தன.அவுஸ்ரேலியாவின் பூர்விக குடிகளின் நிலப்பறிப்பை இனவாதம் நீதியானது என்று வாதிட்டது. இதன் விளைவாக இம்மக்கள் தொடர்ச்சியாக வறுமை, சுகாதாரவசதியின்மை என்பவற்றால் பாதிக்கப்பட்டு அந்த சமூகம்பாரிய அழிவுக்குள்ளானது.மேலும் சிறைகளில் வைக்கப்படும் அவுஸ்ரேலிய பூர்வீக குடிகளின் விகிதாசாரம் தென்னாபிரிக்காவில் வெள்ளையிரின் ஆதிக்கத்தின் போது சிறையில் இருந்த கறுப்பினத்தவரின் விகிதத்தை விட 5 மடங்கு அதிகமாக காணப்படுகிறது. 2007ம் ஆண்டில் அவுஸ்ரேலியாவின் வடபகுதியில் பூர்வீக மக்களை வெளியேற்றுவதற்கு அவுஸ்ரேலியா அரசாங்கம் நயவஞ்சகநடவடிக்கையை மேற்கொண்டது. இந்த நடவடிக்கைக்கு பொலிஸ், இராணுவம் சமஜ்டி அரசாங்கத்தின் தொழிலாளர்கள் பயன்படுத்தப் பட்டதுடன் அம் மக்களுக்க வழங்கப்பட்ட சகலவிதமான வசதி வாய்ப்புக்களும் முடக்கப்பட்டது. இந்த இனவாத செயற்பாட்டுக்காக இனவாதத்தை தடைசெய்யும் சட்ட ஏற்பாட்டையும் அவுஸ்ரேலியா அரசாங்கம் முடக்கிவைத்தது. மேலும் இம் மக்களின் காணிகளை பறிக்கும் சட்டங்களும் அமுல்படுத்தப்பட்டது. அவுஸ்ரேலியா அரசாங்கம் உண்மையில் பூர்வீக மக்கள் மீது மேற்கொண்ட நடவடிக்கையானது பூர்வீக மக்களை பிரிப்பதுடன் அவர்களை அந்த மண்ணில் இருந்து வெளியேற்றவே இந்த நடவடிக்கைகளை மேற் கொண்டு வந்தது. இந்த கொள்கை பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் மேற்கொண்டு வந்தது.

தற்போது முஸ்லீம் மக்களுக்க எதிராக ஐரோப்பாவில் பல்வேறு புறக்கணிப்புக்கள் மேற்கொள்ளப் படுகின்றன 2001செப்டம்பர் 11 தாக்குதலின் பின்னர் இது கடுமையாக உள்ளது. பயங்கரவாதம் என்றால் மத்திய கிழக்கை சார்ந்த ஒருவரின் தோற்றத்துடன் சம்பந்தப்பட்டது.என்ற நிலமை உருவாக்கப்பட்டுள்ளது. இது மேற்குலக ஊடகங்களின் சிருஷ்டிப்பாக உள்ளது. இதன் மூலம் ஐரோப்பிய நாடுகளில் முஸ்லீம் மக்களை ஏனைய சமூகத்தில் இருந்து பிரித்துவைக்கும் நிலை அதிகரித்து காணப்படுகிறது. இவர்கள் முஸ்லீம் நாடுகள் மீது தாம் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பை தமது நாட்டு மக்கள் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காக, ஐரோப்பிய அரசாங்கங்கள் முஸ்லீம் மக்களை பற்றிய தவரான பிரச்சாரங்களை சகல நாடுகளிலும் முன்னெடுக்கிறது. பயத்தை உருவாக்கி அதன் மூலம் தேசிய இனங்களை அடக்கி வைப்பதன் மூலம் சமூகத்தில் தீவிரமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சமூக இயக்கத்தைத் தடுக்க இவர்கள் முயல்கின்றனர்.

இன்று பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டங்கள்யாவும் தேசிய விடுதலையும் குறிப்பாக மூன்றாம் மண்டல நாடுகளில் ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்காகவே பயன்படுத்தப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

# புதிய சமதர்மம்

புதிய உலகம் படைப்போம்

143/3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 0112430621 தொ. மடல். 0112305963
ஈமெயில்: putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info

பதிவு செய்யப்பட்ட செய்தி பத்திரிகையாகும்

## தமிழ் தேசிய விடுதலை போராட்டத்தின் எதிர் கால நகர்வு

கடந்த 60 ஆண்டுகளுக்குமேலாக

தமிழ் மக்களின் விடுதலை போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.இந்த 60 ஆண்டு காலப்பகுதியில் இப்போராட்டம் சந்தித்த இழப்புகள் ஏராளம். மேலும் இப் போராட்டம் இடதுசாரிகளின் ஆதரவை பெறுவதற்கு ஒரு போதும் முயலவில்லை.

இலங்கையின் பாரம்பரிய இடதுசாரிகள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு செய்த துரோத்தை காரணமாக வைத்துக் கொண்டு தமிழ் தலைமைகள இடதுசாரி போராட்ட வடிவங்கள் மீதும், போராட்ட வழிமுறைகள் மீதம் நம்பிக்கை வைக்கும், செயற்பாடுகளில் இருந்து, தமிழ் மக்களைக் தூரவே வைத்துள்ளனர். இதன் விளைவால் தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்திற்குரிய சர்வதேச ஆதரவும், இழந்த நிலையே இறுதியில் ஏற்பட்டுள்ளது.தென்னிலங்கையில் வாழும் மக்களும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானவர்கள் என்ற போக்கை நாம் கைவிட வேண்டும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ் மக்களின் தலைமைகளை விட உறுதியான ஆதரவு வழங்கக் கூடிய சிறந்த தலைமைகள் தென்னிலங்கையில் இருப்பதை நாம் ஒப்பக்கொள்ள வேண்டும். போரின் விளைவால் தமிழ் மக்களின் அனேகமானோர் இன்று எவ்வித வருமானங்களும் இன்றி தினம் தினம் அவதிப்படும் துன்பநிலையில் உள்ளார்கள். இம் மக்களின் சமூகப் பாதுக்காப்புக்கான போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். எனவே தமிழ் மக்கள் மத்தியில் பலமான இடதுசாரி தலைமை ஒன்று கட்டி எழுப்பப் பட வேண்டும். இதன் மூலமே தென் இலங்கை தொழிலாளர்களின் ஆதரவினை பொது விடுதலை போராட்டத்திற்கு பெற்றுக் கொடுக்க முடியும் இதன் ஊடாகவே சர்வதேச ஆதரவினையும் பெற முடியும்.

தமிழ் மக்களின் வலதுசாரி பிரிவினர் தென் இலங்கை வலதுசாரி பிரிவினருடன் உள்ள தொடர்ப்பு இன்று வரை குறையாத நிலையிலேயே காணப்படுகிறது. திரை மறைவில் அது அதிகளவில் காணப்படுகிறது. அண்மைக் காலங்களில் நடைபெற்ற தேர்தல்கள் இதற்கு நேரடியான சாட்சியாகும். தமிழ் மக்கள் மத்தியில் தொழிற்சங்க மட்டத்தில் வெகுஜன மட்டத்தில் பாரிய ஸ்தாபன மயப்படுத்தும் நடகடிக்கைகள் செயற்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகள் இன்று எமக்கு உள்ளது.இத்தகைய நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்களின் வலதுசாரி பிரிவினர் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள்.எனவே தமிழ் மக்கள் மத்தியில் இடதுசாரி கட்டமைப்பின் தேவைப்பாடு இன்று அதி முக்கியமான தேவையாக உள்ளது.

1987 காலப்பகுதி வரை தமிழ் மக்கள் மத்தியில் இந்த கட்டமைப்பு பலமாவே இருந்தது 1987ல் இந்திய படையின் வருகையுடன் பல சோதனைகளுக்கு முகம் கொடுத்த இந்த கட்டமைப்பு பின்னர்சிதைந்துப்போனது. தோழர். ஆ.க.அண்ணாமலையின் 21வது நினைவுதின வைபவத்தில் உரையாற்றிய விரிவுரையாளர் சீலன் கதிர்காமர் "தென்னிலங்கையில் உருவாகாத இடதுசாரி ஐக்கியம் வட பகுதியில் 1980 காலப்பகுதியில் சிறந்த முறையில் இருந்தது" என குறிப்பிட்டார்.எனவே அந்த நிலையை மீண்டும் உருவாக்க் வேண்டும். இதன் ஊடாக இந்திய தளத்தில் இருக்கும் இடதுசாரி சக்திகளின் ஆதரவை பெற முடியும். எனவே வடக்கு கிழக்கில் அனைத்து இடதுசாரிசக்திகளையும் ஐக்கியப்படுமாறு அறைகூவல் விடுகின்றோம்.

வாகர்களுக்கு..!
உங்கள் கருத்துக்களை தவறாது எழுதுங்கள் மாற்றுக் கருத்துக்களாயினும் பிரசுரிப்போம். உங்கள் ஆதரவு எங்கள் பணிகளை ஊக்குவிக்கும்

தொடர்பு முகவரி

வாசகர் கருத்துக்களம்
புதிய சமதர்மம்
143/3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 2430621 தொ. மடல். 2305963
putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info

# கார்ல் மார்க்ஸ் தனது நண்பர் ஏங்கெல்சுக்கு எழுதிய கடிதம்.

உலகில் தோன்றிய தத்துவங்கள் யாவும் காலாவதியாகிவிட்ட நிலையில் மார்க்சீய தத்துவம் மட்டும் காலாவதியாகவில்லை என்பது பி.பி.சி செய்தி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் மூலம் பெறப்பட்ட முடிவாகும். ஆனால் அந்த தத்துவத்தத்துக்குரிய கார்ல் மார்க்ஸ் பட்ட இன்னல்களை. துன்பங்கள், துயரங்கள் வார்த்தைகளால் வடிக்க முடியாது. கார்ல்மார்க்ஸ் 1818ம் ஆண்டு ஜேர்மனியின் ரீர் நகரில் பிறந்தார்.கார்ல்மார்க்ஸ் பேர்லின் நகரின் பல்கலைகழகத்தில் தத்துவத் துறையில் கலாநிதி பட்டத்தை பெற்றார். தனது கல்வியை முடித்தபின் கார்ல்மார்க்ஸ் ஜேர்மனியில் அன்று வெளியான பிரபல பத்திரிகையான "RHEINISCHE ZEITGNG" பத்திரிகையில் கடைமையாற்றினார். பின்பு தனது குடும்பத்துடன் பாரிசுக்கு சென்று இறுதியில் இறக்கும்வரை லண்டனில் குடியேறினார். லண்டனில் வாழ்ந்த காலப்பகுதியில் கார்ல்மாக்ஸை வறுமை மிகவும் கொடிய முறையில் வதைத்துள்ளது. இருந்தபோதும் தனது இலட்சியத்தில் இருந்து எள்ளளவும் விலகாது மூலதனம் என்னும் நூலை இவ் உலகிற்கு வழங்கினார். வறுமையில் வாடுவோருக்குரிய மீட்சியை கார்ல்மாக்ஸ் ஒருவரே இவ் உலகிற்கு வழங்கினார். எனவே தான் மார்சீய தத்துவம் இன்றும், என்றும் உயிருடன் வாழும் சாகாவரத்தை பெற்றுள்ளது. மூலதனத்தின் முதலாவது பதிப்பு 1867ல் வெளியானது. இந்த காலப்பகுதியில் பிரடிக்ஸ் ஏங்கல்ஸ் இவருக்கு உதவியாளராக இருந்தார். ஏங்கல்ஸ் 1820 தொடக்கம் 1895 வரை வாழ்ந்தவர். கார்ல்மாக்ஸ் இறந்த பின் அவரின் ஆய்வுகளை தொடர்ந்து ஆய்வு செய்து



உலகிற்கு அவரின் தத்துவங்களை வழங்கினார். ஏங்கல்ஸ் லண்டன் மாநகரின் மன் செஸ்ரர் நகரில் வாழ்ந்தார். ஏங்கல்ஸ் பொருளாதாரரீதியில் உயர் நிலையில் இருந்தார். இவரது தந்தையார் துணி உற்பத்திசெய்யும் தொழிற்சாலையின் உரிமையாளராவார்.

இக் கடிதத்தை கார்ல்மாக்ஸ் ஏங்கெல்ஸ்க்கு எழுதும் போது மார்க்ஸ் மிகவும் மோசமான வறுமைக்குள் சிக்குண்டிருந்தார். இக் கடிதம் ஜோன் ஈ லூயிஸ் எழுதிய நூலில் இருந்து பெறப்பட்டதாகும்.

லண்டன்
அன்புள்ள ஏங்கெல்ஸ்
1852 செப்டம்பர் 8

இன்று வறுமை நிலையினால் பாரிய அழுத்தங்களுக்கு உள்ளாகி இருந்த சூழ்நிலையில் உமது கடிதம் கிடைத்தது. எனது மனைவி நோய்வாய்ப்பட்டு படுக்கையில் உள்ளார். எனது மகளும் காய்ச்சல் காரணமாக படுக்கையில் உள்ளார். நான் இவர்களை மருத்துவரிடம் கூட்டிச் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றேன். தற்போது என்னிடம் எத்தகைய பணமும் இல்லை. கடந்த 10 நாட்களாக எனது குடும்பம் பாணையும், உருளைக் கிழங்கையும் உண்டே உயிர் வாழ்ந்து வருகின்றது. இன்று அதற்கு கூட வசதியற்ற நிலையில் உள்ளேன். நாங்கள் உண்ணும் உணவு தற்போதைய கால நிலைக்கு ஏற்றதா என்பது எனக்கு தெரியாது சுருக்கமாக சொன்னால் ஒரு பத்திரிகையை வாங்கி படிக்க கூட வசதியற்ற நிலையில் வாழ்கிறேன். வழைமையாக நான் எழுதிவரும் வார பத்திரிகைக்கு கூட எழுத முடியாத நிலைக்கு வறுமை என்னை தள்ளியுள்ளது. நீர் முன்பு என்னுடன் கதைக்கும் போது ஓரளவு பணம் அனுப்புவதாக கூறியிருந்தீர் இந்த நம்பிக்கையின் காரணமாக எனது மனைவியை அமைதியாக இருக்கும்படி கூறி வருகிறேன் நான் கொடுக்க வேண்டிய கடன்களை எல்லாம் செப்டம்பர் மாதம் வரை ஒத்திவைத்துள்ளேன். கடன்களை செலுத்த நான் எடுத்த முயற்சிகள் யாவும் பயன் அளிக்கவில்லை வெளிட மேயர் என்ற நாய் பயல் எனக்கு தரவேண்டிய 15 பவுண்களை தராமல் ஏமாற்றி வருகிறான் ஜேர்மனில் உள்ள ஸ்ரயிநட் என்பவருக்கு கடிதம் எழுத் உளளளேன் அந்த பன்றிப் பயலும் எதுவித மறு மொழியும் அனுப்பாமல் இருக்கின்றான். இறுதியாக பெரக் என்பவரிடம் சென்றேன் அதுவும் வெற்றியளிக்கவில்லை புதிய மாத இதழுக்கு எழுதுவதற்காக அந்த உரிமையாளரிடம் சென்றேன் அவர் நாகரீகமாக நிராகரித்துள்ளார். ஒரு ஆங்கிலேயன் பின்னால் எனது நூல் தொடர்பாக சுற்றி வந்தேன் அதுவும் தோல்வியடைந்துள்ளது. எனது வீட்டு உரிமையாளர் என்னை வீட்டை விட்டு துரத்தும் நிலைவந்துள்ளது. அப்படி துரத்தினால் அதுவும் எனக்கு நன்மையாக அமையும் என நம்புகிறேன் வீட்டு வாடைகைக்கு வழங்கும் 22 பென்ஸ் எனது பஞ்சத்தை போக்க உதவும் இதை அவன் செய்வான் என நான் நம்பவில்லை. தற்போது நான் பாண்காரன், தேனீர் கடைக்காரன், மழிகைக் கடைக்காரன், இறைச்சி கடைக்காரன், ஆகியோருக்கு பணம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளேன் இந்த வறுமையில் இருந்து மீள என்னால் எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளுமே தோல்வியை வழங்கியுள்ளது. எனது வீடு இன்று மருத்துவமனை போல் காணப்படுகிறது. இந்த துயரமான சூழ்நிலையில் எனது புலனை வேறு துறைக்கு செலுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

உங்கள் அன்பின்
கார்ல்மாக்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org